தமிழ்நாடு அரசு
பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை
மாவட்டப் புள்ளிஇயல் அலுவலகம், சிவகங்கை.

ந.க.எண்: 2127/இ2/2025 நாள்:15.12.2025

**வேலை வாய்ப்பு அறிவிக்கை**

சிவகங்கை மாவட்டப் புள்ளிஇயல் துணை இயக்குநர் அலுவலகத்தில் காலியாக உள்ள நிரந்தர முழுநேரக்காவலர் பதவிக்கு கீழே குறிப்பிட்ட இனசுழற்சி முறை அடிப்படையில் நியமனம் செய்யப்படவுள்ளது. எனவே, சிவகங்கை மாவட்டத்திற்குட்பட்ட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண். | அலுவலகம் | பதவியின் பெயர் | இனசுழற்சி முறை | முன்னுரிமை விவரம் |
|---|---|---|---|---|
| 1. | மாவட்ட புள்ளிஇயல் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சிவகங்கை-630562 | நிரந்தர முழுநேரக் காவலர்<br><br>**ஊதியத் தொகுப்பு:**<br><br>(ரூ.15,700/- - 58,100/-) | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் அரசாணை (நிலை) எண்: 142 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(கே) துறை நாள்: 14.10.2009 வரிசை எண்:53 | (முன்னுரிமை பெற்றவர்) போரில் உடல் தகுதியை இழந்த முன்னாள், இராணுவத்தினர், அரசாணை (நிலை) எண் 122 மனித வள மேலாண்மை(கே2) துறை, நாள்: 02.11.2021, வரிசை எண்: 4 |

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்வித் தகுதி | : | 1. நிரந்தர முழுநேரக் காவலர் - எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்கள்(அதற்கான சான்றுடன்) |
| 2. | வயது | : | 1.பொதுப்போட்டி 18 வயதுக்கு மேல் - 32 வயதுக்குள் இருக்க வேண்டும்.<br>2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 18 வயதிற்கு மேல் - 37 வயதிற்குள் இருக்க வேண்டும்.<br>3. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 18 வயதிற்கு மேல் - 35 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.<br>4. மாற்றுத்திறனாளிகள் -அனைத்து வகுப்பினருக்கும் கூடுதலாக 10 வருடங்கள்<br>5. போரில் உடற்தகுதியினை இழந்த முன்னாள் இராணுவத்தினர் - 53 வயதிற்குள் இருத்தல் வேண்டும். |
| 3. | தேர்வு முறை | : | தேர்வு மற்றும் நேர்காணல் |

<u>நிபந்தனைகள்</u>

1. விண்ணபிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் தங்கள் பெயர், பிறந்த தேதி, வயது, கல்வித் தகுதி, சாதி, இருப்பிட முகவரி, முன்னுரிமைச் சான்று மற்றும் பணி அனுபவம் போன்ற விவரங்களைக் குறிப்பிட்டும் இருப்பிட சான்றிதழ் ஆதார் அட்டை நகல், அலைபேசி எண் மற்றும் இரண்டு அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடமிருந்து நாளது தேதியில் பெறப்பட்ட நன்னடத்தை சான்றுகளுடன் இணைத்தும் விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென தனியாக விண்ணப்பங்களோ, படிவங்களோ அங்கீகரிக்கப்படவில்லை. உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

2. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் முகவரிக்கு நேரிலோ, அஞ்சல் வாயிலாகவோ 05.01.2026 பிற்பகல் 5.45 க்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3. தேர்வு மற்றும் நேர்காணல் தேதி விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் தெரிவிக்கப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**
புள்ளிஇயல் துணை இயக்குநர்
மாவட்ட புள்ளிஇயல் அலுவலகம்
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்